தனிப்பிரதி – ரூ. 20/-    ஆண்டு சந்தா– ரூ. 200/-

# முத்தமிழ் நேசன்

ஜூன் 2023    மலர் 2 இதழ் 14    இனிக்கும் இலக்கிய இதழ்










**அத்தர் நூல் குறித்த விமர்சனம்**



## உலகத்தரத்தை நோக்கித் தமிழ் சினிமாக்கள்

## நவீன தொழில்நுட்பத்தில் அதிர்வலைகள்

– சிறப்புக் கட்டுரை

காதலெனும் தீபமேற்றிக்
காத்திருக்க வைப்பவளே
காலமெல்லாம் உன் மடியில்
கானங்கள் இசைக்க வைத்தாய்
நீயன்றி  நானும்
நிலவாகித் தேய்கிறேன்.
நினைவுகள் குவியலில்
நின்று தவிக்கின்றேன்.

அலைபேசி அதிர்விலும்
அணைக்கும் ஆருயிரே.
அன்பின் கயிற்றிலே
அழகாகக் கட்டி வைத்தாய்.

விடியும் பொழுதிலும்
விழிகள் நடுவே
விந்தையாய் அமர்ந்து
விசித்திரம் செய்கிறாய் .



-தமிழ்மாமணி முனைவர் தாழை இரா.உதயநேசன்

# முத்தமிழ் நேசன்

## இனிக்கும் இலக்கிய இதழ்

ஜுன் 2023 மலர் 2 இதழ் 14

**நிறுவனர்**

**தாழை இரா.உதயநேசன்**

**ஆசிரியர்**

பாரதி சந்திரன்

**ஆசிரியர் குழு**

ஜோ. சம்பத்குமார்

மு. தனஞ்செழியன்

எ.பாவலன்

த. பரிமளா

**கௌரவ ஆலோசகர்:**

கவிச்சுடர் கா.ந.கல்யாணசுந்தரம்

**வடிவமைப்பு**

ம.சேவியர்

**அச்சு**

M.S ஆப்செட் ராயப்பேட்டை



**அலுவலக முகவரி**

முத்தமிழ் நேசன்
எண்:10, முதல் தெரு,ஸ்ரீராமபுரம்
ஆம்பூர் – 635 802
திருப்பத்தூர் மாவட்டம்


## பொருளடக்கம்

**கவிதைகள்**


ஆரூர் தமிழ் நாடன்

து.பா.பரமேஸ்வரி

அய்ஷத் அப்ஸத்

வ.சு.வசந்தா

சுந்தரி மணியன்

சுபாஷினி

டாக். ஜலிலா முஸம்மில்

புவனா சற்குணம்

ச.காய்த்ரி

அமிர்தா தமிழரசன்

பேரா.மு.விஜய குமார்

ஐயந்தினி வாசீகன்

வனஜா உதயகுமாரன்

சற்குரு பேரின்ப நாயகம்

பொன் தமிழரசன்

அப்துல் நாசர்

சாரதாபரா

விமலாதேவி

கவிஞர் புலத்தூர் தனபாலன்

உமா கணேசநாதன்

சனுஜா முகம்மது சப்ரி.


**சிறுகதை**


செ புனிதவதி


**கட்டுரைகள்**


முனைவர் சசிகுமார்

சம்பத்.ஜி



இதழுக்குப் படைப்புகளை அனுப்ப விரும்பும் படைப்பாளிகள்,
யுனிகோட் (unicode) எழுத்துருவில் மட்டுமே தட்டச்சு செய்து அனுப்ப வேண்டும்.
படைப்புகளை அனுப்ப வேண்டிய மின்னஞ்சல் முகவரி:

**mutamilnesan2022@gmail.com**

## தலையங்கம்

# நேசம் மிக்க வணக்கம்

தமிழ்த் திரைப்படங்கள் தொடர்ந்து சர்வதேச, தேசிய திரைப்பட விழாக்களில் பல விருதுகளைப் பெற்றுக்கொண்டு வருவது, தமிழ்க் கலைத்துறையின் வளர்ச்சியினை வெளிப்படுத்துகிறது. “சார்பெட்டா” திரைப்படம் ஜப்பானில் நடைபெறவுள்ள 2021 - ஆம் ஆண்டுக்கான சர்வதேசத் திரைப்பட விழாவில், சிறந்த இயக்குனர், சிறந்த திரைப்படம், சிறந்த கலை இயக்குனருக்கான விருதுகளைப் பெற்றுள்ளது. திரைப்படக்குழுவிற்கு வாழ்த்துகள்.

68-ஆவதுதேசியதிரைப்படவிருதுகளில், ஒன்பது பிரிவுகளில் 10 தேசிய விருதுகளைத் தமிழ்த் திரைப்படங்கள் பெற்றுள்ளன. அதில் “சூரரைப் போற்று” திரைப்படம் மட்டும் 5 விருதுகளைப் பெற்றுள்ளது திரைத்துறையினருக்கு மட்டுமல்ல, தமிழகத்திற்கும், தமிழ்க் கலைஞர்களுக்கும் மகிழ்ச்சியை அளிக்கிறது.

ஒத்த செருப்பு, இரவின் நிழல், ராக்கெட்ரீ தி நம்பி எஃபெக்ட் போன்ற பல படங்கள் ஆஸ்கர் விருதை நோக்கியும் சென்றுள்ளன. வணிக நோக்கத்தோடு இல்லாது உலகத்தரத்தை எட்டுவதற்குத் தமிழ்த் திரையுலகம் சென்று கொண்டிருப்பது ஆரோக்கியமான விஷயமாகும்.

“பப்புவா நியூ கினியா” நாட்டின் மொழியான “தோக் பிஷின்” மொழியில் தமிழ்ப்பொதுமறையாம் திருக்குறள் சமீபத்தில் மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டது. இதுபோல், தமிழின் பல ஒப்பற்ற நூல்களும், தற்கால நாவல் இலக்கியங்களும், உலக மொழிகள் பலவற்றில் மொழிபெயர்க்கப்படுகின்றன எனும் செய்திகள் தொடர்ந்து வந்து கொண்டே இருக்கின்றன. தமிழ்மொழியின் படைப்புகள் உலகமொழிகளில் எல்லாம் மொழிபெயர்க்கப்படும்பொழுது தமிழரின் சிந்தனைகளும், கற்பனைகளும் மேலைநாடுகளில் பேசப்படும் ஒன்றாகச் சிறப்பைப்பெறும்.

சூடான், சிரியா போன்ற நாடுகளில் உள்நாட்டுப்போர் மக்களைச் சொல்லவொணாத் துயரத்தில் ஆழ்த்தி இருக்கிறது. அதனால் அகதிகளாக மக்கள் பல்வேறு நாடுகளில் தஞ்சம் புகுந்துள்ளனர். இவ்விரு நாடுகளிலும் மகிழ்ச்சி திரும்பும் சூழ்நிலையை உலக நாடுகள் ஏற்படுத்த வேண்டும்.

இந்தியாவில் 2000 ரூபாய் நோட்டுகள் திரும்பப் பெறுவதாக அறிவித்திருப்பது, அதைச் சில வங்கிகள் மாற்றிக் கொடுப்பதில் ஏற்பட்டுள்ள குழப்பம். மக்களின் மனஉளைச்சல், புதிய பாராளுமன்ற கட்டிடத்தைத் திறக்கும் நாள் மற்றும் திறப்பு விழாவில் ஜனாதிபதிக்கு முன்னுரிமை தரப்படாதது குறித்த சர்ச்சை இவையெல்லாம் ஒன்றிய அரசின் தரத்தைக் குறைக்கும் செயலாகும்.

முத்தமிழ்நேசன் இதழின் படைப்புகள்குறித்து வாசகர்களாகிய உங்களிடமிருந்து கருத்துக்களை எதிர்பார்க்கின்றோம். இதழை இலக்கிய ஆர்வமுடைய அனைத்து நண்பர்களிடம் அறிமுகபபடுத்துங்கள் .



நேசமுடன்,

**பாரதிசந்திரன்**

( இதழுக்குச் சந்தா கட்ட விரும்பும் வாசகர்கள் சந்தா தொகையை Google pay வழியாகச் செலுத்தலாம். Google pay No : 9159698466. சந்தா கட்டிய பின் தங்கள் முகவரியை இந்த எண்ணிற்கு வாட்ஸ்அப் மூலம் தெரியப்படுத்துங்கள். இதழின் வளர்ச்சிக்கும், தமிழின் வளர்ச்சிக்கும் சந்தாக் கட்டத் தாமதிக்காதீர்கள். அச்சுப் பதிப்பாகவும், மின்இதழாகவும், உங்கள் படைப்புகளை உலகம் முழுவதுமிருக்கும் இலக்கிய வாசகர்கள் இவ்விதழ் மூலம் படிக்கின்றனர். எனவே, தொடர்ந்து எழுதவும் செய்யுங்கள்)

சிலந்தி பின்னிய வலை,
அகப்பட்டுக் கொண்டது,
காய்ந்த இலை.

தொழிலாளர் தினம்,
எப்போது கிடைக்குமோ,
உழைப்புக்கேற்ற வேதனம்.

நாகரீகத்தின் வளர்ச்சி,
உச்சத்தை தொடர்கிறது,
ஆடைகளின் கவர்ச்சி.

வாழ்வின் அருமை,
ஞாபகம் வருகின்றது,
தொலைந்துபோன இளமை.

ஆட்சி மாற்றம்,
பரிசாய் கிடைத்தது,
விலையேற்றம்.

பௌர்ணமி நிலவு,
உன்னோடு நான்,
நல்ல கனவு.

பழைய தழும்புகள்,
ஞாபகம் வருகின்றன,
இளமைக் குறும்புகள்.

**– அய்ஷத்அப்ஸத்**
பாலமுனை–இலங்கை

# நிரப்பும் வெற்றுக்
# கோப்பை



வெற்றுத் தூரிகையால் வரைகிற ஓவியங்கள் கூட.
வெற்றுப் பாத்திரங்களாய் மாறி, ரசிக்கிற கண்களால் தங்களை நிரப்புகின்றன.
புலன்களால் வரையப்பட்ட உயிர் ஓவியங்களான நாம் நமது
தேவைகளால் நம்மை நிரப்பைக்கொள்ள வேண்டாமா?
வெற்றாய் இருங்கள். வெற்றை நேசியுங்கள்.
உங்கள் வெற்றிலிருந்து நீங்கள் விடுபட
உங்களை உங்களுக்குப் பிடித்தவைகளால் நிரப்ப முயற்சியுங்கள்.
காலிக் கோப்பைகளைத்தான் நிரப்ப முடியும்.
எனவே முதலில் காலிக் கோப்பையாய் இருங்கள்.
வாழ்வை நிரப்பும் காலிகோப்பையாக மாறுங்கள்.
உங்கள் கோப்பைகளை அன்பாலும்,கருணையாலும்,காதலாலும்,மனிதத்தாலும்
நிரப்ப முயலுங்கள்.
வாழ்வின் வண்ணங்களும் வசீகரங்களும் இனிய அனுபவங்களும்
உங்கள் இனிய செயல்களால் உங்களை நிரப்பும்.
எனவே முதலில் காலிக் கோப்பையாய் இருங்கள்.
நம் காலிக் கோப்பைகளே நம் பசி.
நம் பசி தனக்குத் தேவையானதை
எப்படியும் அடைந்துவிடும்

(‘கவிமாமணி’ ஆரூர் தமிழ்நாடன் அவர்களின்
‘காலநதி’ நூலிலிருந்து ..)



**‘கவிமாமணி’ ஆரூர் தமிழ்நாடன்**

என்னருகில் உன் ஞாபகம்
குவளையில் மிச்சமாய்க் கிடக்கும்
தேனீர்த்துளிகள் கலங்கின
இறுதியாய் நீ பருகத்தந்த பிரிவை..

அடுக்களையில் காய்ந்துகிடக்கும்
தோசைத்துண்டுகளில்
உனது காதல்
இன்னமும் ஈரமாயத்தான் இருக்கிறது.

கசக்கிய காகிதங்கள் அழுது தீர்த்தன
நீ பறக்கவிட்ட
முத்தங்களைக் காணாமல்..

மடித்துவைத்த சுடிதார்
தினசரி வாசிக்கிறது
நீ எழுதிய கடைசி கவிதையை..

தொலைக்காட்சி கூடஉனக்குத்தான்
வக்காலத்துவாங்குகிறது.
உனதுமுகத்தில்நூறுநாயகிகள்..

கடற்கரைமணலும்அழிக்காமல்
பத்திரப்படுத்திவைத்துள்ளது
உனதுதடயங்களை
மீண்டும் தேடிவருவேன் என..

காற்றும்கூட ஓரவஞ்சனை தான் செய்கிறது..
பதுக்கி வைத்திருந்த
உனது காதல் மொழிகளைக் கொண்டு
வாதிடுகிறது உனக்காக..

வெயில்கூட உனைப்பொசுக்காமல்
உள்ளிருந்துகுளிரூட்டுகிறது
நமது சந்திப்புகளை..

திரும்பிய திசையொன்றும்
திருப்பித்தான் போடுகின்றன
உனது பிம்பங்களை..

நினைவுகளைக் கொன்றொழிக்க
மெனக்கிடும்ஒவ்வொருநொடியும்
ஞாபகக்குஞ்சுகள்
பிறந்து கொண்டே இருக்கின்றன
நானறியாமல்..

**து.பா.பரமேஸ்வரி**

சென்னை

பறவையின்
எச்சம்
பசுமைப் புரட்சி.

ஆற்று நீரின் அழகு
விளையாடும் மீன்கள்
நஞ்சில்லா நீர்.

சட்டம் போட்ட படத்துக்குள்
சிரித்துக் கொண்டே இருப்பார்கள்
தாத்தாவும் பாட்டியும்.

கசிந்து கொண்டே இருக்கும்
இமையோர விழி நீர்
ஏழையின் சிரிப்பு.

சிலைகள் இருக்கிறது
கோவில் தோறும்
கடவுளாக ஐயர்.

**வ.சு.வசந்தா**

சென்னை - 92

# அதிர்வலைகள்



முனைவர் பெ. சசிகுமார்
இஸ்ரோ விஞ்ஞானி


காலையில் எழுந்தோம், அலுவலகத்திற்குச் சென்றோம் மாலையில் வீட்டிற்கு வந்தோம் என்று அன்றாடம் சென்று கொண்டிருக்கும் வாழ்க்கையில் திடீரெனப் புதிய நிகழ்ச்சிகளைக் காண நேர்ந்தால் அதிர்ச்சி அடைகிறோம். ஒரு வேலையைப் பலமுறை கூறியும் செய்யாதவரை மாற்றுவதற்கு அவருக்கு அதிர்ச்சி வைத்தியம் தேவைப்படுகிறது என்று கூறுகிறோம். சாதாரணமாக நடைபெறும் ஒரு செயலில் இருந்து முற்றிலும் மாறுபட்டு அதிக ஆற்றலுடன் நடக்கும் நிகழ்ச்சியை அதிர்ச்சி என்று வைத்துக் கொள்ளலாம். நம்மால் நம்ப முடியாத ஜீரணிக்க முடியாத செயல்களைக் கேட்டவுடன் அதிர்ச்சி அடைந்து விட்டதாகக் கூறுகிறோம்.

ஒலியின் வேகம் மணிக்குத் தோராயமாக 1200 கிலோமீட்டர். இதைவிட அதி வேகமாகப் பயணம் செய்யும் பொருட்களைச் சுற்றி அதிர்வலைகள் உருவாக்கப்படுகின்றன. அழுத்த வேறுபாட்டின் காரணமாக ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு வேகமாக நகரும்போதும் பொழுதும் அதிர்வலைகள் உருவாகின்றன. துப்பாக்கியில் இருந்து வெளிவரும் தோட்டா சீறிப்பாயும் பொழுது தன்னைச் சுற்றி ஒரு அதிர்வலையை உருவாக்கிக் கொண்டு செல்கிறது. நம்மைச் சுற்றி கண்ணுக்குத் தெரியாத அதிர்வலைகள் ஏற்பட்டுக் கொண்டே தான் இருக்கின்றன.

வெடி விபத்து நடைபெறும் பொழுது வெடித்த வெடிபொருளில் இருந்து அதீத ஆற்றல் உருவாகிறது. அந்த ஆற்றல் சுற்றி இருக்கும் காற்றை அதிவேகத்தில் தள்ள முயற்சிக்கிறது. ஒலியை விடப் பல மடங்கு வேகத்தில் காற்று நகரும்

பொழுது சுற்றி நிற்கும் மனிதர்கள் கட்டிடங்கள் ஆகியவற்றைத் தாக்குகிறது. அதிர்வலைகள் எப்படி உருவாகின்றன அதை எப்படிக் கையாள்வது என்பது நவீன தொழில்நுட்பத்தின் ஒரு முக்கிய ஆராய்ச்சியாகும்.

சரி இந்த அதிர்வலைகள் எப்படிப் பயன்படுகின்றன என்பது ஆச்சரியம் அளிக்கிறது. குழந்தைகளை



மருத்துவமனைக்குக் கொண்டு வரும் பொழுது ஊசி மூலமாக மருந்து செலுத்துவது அல்லது மாதிரிக்கு ரத்தங்கள் எடுப்பது

மிகவும் சவாலான செயல். ஊசி போடுவதால் உருவாகும் வலி மிகப் பெரியதாக இருக்கும் என்று அவர்கள் நம்புகிறார்கள். பெரியவர்களுக்கும் கூட இன்னும் அந்தப் பயம் இருக்கிறது. ஊசி இல்லாமல் மருந்தை உள்ளே செலுத்துவதில் இந்த அதிர்வலைகள் பயன்படுகின்றன. தேவையான மருந்தை அதிக அழுத்தத்தில் அதிர்வலைகளை உருவாக்குவதன் மூலம் தோலில் ஊடுருவி சென்று உடலில் கலப்பதற்கு இது ஏதுவாகிறது.

அதிர்வலைகளை உருவாக்கிக் காயங்களைச் சுத்தம் செய்தல்விரைவாகக் குணப்படுத்துதல்.

பல விதங்களில் உடலில் காயங்கள் ஏற்படுகின்றன. விபத்து, அறுவை சிகிச்சை மற்றும் பல காரணங்களைக் கூறலாம். உடலில் காயம் ஏற்படும் போது புதிய செல்கள் உருவாகி புதுப்பித்துக் காயத்தைச் சரி செய்ய வேண்டும். அதற்கு உதவி செய்யாத செல்கள் நீக்கப்பட வேண்டும். காயம் ஏற்பட்ட பகுதியைச் சுத்தம் செய்வதும் மருந்துகள் கொடுப்பதும், காயத்தைக் குணமாக்கும் செல்களை ஊக்குவிக்குவதற்கும் எடுக்கும் நடவடிக்கை ஆகும்.


உடலில் உள்ள செல்கள் புதுப்பித்துக் காயம் குணமாக ஒரு குறிப்பிட்ட காலம் தேவைப்படும். சர்க்கரை நோய் உள்ளவர்களுக்குக் காயங்கள் ஏற்படும் பொழுது உடலில் உள்ள செல்கள் புதுப்பித்துக் காயம் குணமடையப் பல நாட்களாகும் அதனால் காயம் ஏற்பட்ட பகுதியில் அதிர்வலைகளை உருவாக்கும் பொழுது அந்த அதிர்வலைகள் அங்கே இருக்கும் தேவையில்லாத பாக்டீரியாக்களை விரட்டவும் மிக விரைவில் காயங்களைக் குணமாக்கக்கூடிய வேதிப்பொருட்களை உடலில் உள்ள நல்ல பாக்டீரியாக்கள்

வெளியிடவும் உறுதுணை புரிகிறது. அதனால் மிக விரைவாகக் காயங்கள் குணப்படுத்தப்படுகின்றன.

தேநீரை குடிக்கும் பொழுது சிலர் நாக்கில் வைப்பதற்கு முன்பு உறிஞ்சி ஒரு வித ஒலியை உருவாக்கிக் குடிப்பதை பார்த்திருப்போம். இதை அவர் நாகரீகமாகக் குடிக்கவில்லை, உறுமி உறுமி குடிக்கிறார் என்று குறைப்பட்டுக் கொள்பவர்களும் இருக்கிறோம். ஆனால் இப்படிச் செய்யும்பொழுது அந்தத் தேநீரில் பாலிப்பினால் என்ற வேதிப்பொருள் உருவாக்கப்படுகிறது. அந்த வேதிப்பொருள் தேநீரின் சுவையைக் கூட்டுகிறது. உறிஞ்சும் பொழுது அதிர்வலைகள் தேநீரில் உருவாக்கப்பட்டு அதன் சுவை கூடுகிறது என்கிறது ஆராய்ச்சிகள்.

மூங்கிலால் ஆன பொருட்கள் செய்யும் பொழுது, மூங்கில் பூச்சி தாக்குதலுக்கு எளிதில் உள்ளாகிவிடும். அதனால் அதன் வாழ்நாளை கூட்டுவதற்காக அதில் உள்ள பூச்சிகள் நீக்கப்படுவதோடு அவற்றைப் பாதுகாப்பதற்குத் தேவையான வேதிப்பொருட்களால் சுத்தம் செய்யப்படுகிறது. இந்தச் சுத்தம் செய்யும் வேலையை அதிர்வல்களைக் கொண்டு செய்யும் பொழுது மிகவும் சிறப்பாகச் செய்ய முடிகிறது. பொருட்களைச் சுத்தம் செய்வதற்கு ஊதுதல், உறிஞ்சுதல், தட்டி துடைத்தல் எனப் பல வகைத் தொழில்நுட்பங்களை நாம் பயன்படுத்துகிறோம். ஆனால் அதிர்வலைகளைக் கொண்டு தண்ணீரில் மூழ்க வைத்துள்ள பொருட்களைக் சுத்தம் செய்வது மிகச்சிறந்த முறையாக இருக்கிறது.

அதிர்ச்சி வைத்தியம் சிலருக்கு பயன்படுவது போல் அதிர்வலைகள் நவீன தொழில்நுட்பத்தில் பல இடங்களில் பயன்பாட்டுக்கு வந்துள்ளது ஆச்சரியம் அளிக்கும் செய்தி.



**ஊசி இல்லா மருந்து செலுத்தும் முறை**

## வையத் தலைமைகொள்

மரங்களையும் செடிகளையும்
தலைவணங்கிய
தலைமுறை எமது!
துன்பமென்றால்
மனிதரும் மதங்களும்
ஒன்று கூடும்...
இன்பமென்றால்
தென்றலும் வந்து பாடும்...
உவந்து உபசரிக்கும்
உலகாளும் விருந்தோம்பல்...
விசம் ஈந்தாலும்
அருந்தும் நட்பில்
தலைதூக்கும் பண்பாடு...
மனங்களை, மக்களை
கொள்ளை கொள்ளும்
இன்பத்தமிழ்!
நிலத்தைப் பகுத்து
வளத்தைப் பெருக்கிய
ஐந்திணைக் களமிது
காதலையும் வீரத்தையும்
களமிறக்கிக்
கைகோர்த்த படைப்பு எமது
உலகெங்கும்
கொண்டாடும்
எங்களையும்...
எங்களின் அடையாளத்தையும்...
வையத் தலைமைகொள்
என்றான் பாரதி!
வையத்தலைமையாய்
உணர்கிறேன்
எம்மொழியால்...
எம்மினத்தால்...
முந்தையோரால்...

– சுந்தரிமணியன்
புதூர்

## உழவே தலை

வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம்
வாடியது வள்ளலார் மட்டுமல்ல
விவசாயிகளும் தான்!

நெற்களஞ்சியமாம் தஞ்சையில்
டெல்டா காவிரியில்
விவசாயிகளின் கண்ணீரே
விளைநிலங்களில் பாய்கிறது.

காடுகளைக் கணக்கில்லாமல் வெட்டி
கட்டிடங்கள் பலவிதமாய் கட்டி
விளைநிலங்களைக் கூறுபோட்டு
விற்பனைக்குப் பல பிளாட்டு.

ஊருக்கு உணவளித்த
உன்னத கடவுள் – இன்று
உரிமைகளை இழந்து
வீதிகளில் நிற்கின்றான்!

கலப்பை எடுத்து
கழனி உழுது
கஞ்சிதந்த உழவன் இன்று
கடனாளியாய் நிற்கின்றான்!

அறுவடை உணவை மறந்துவிட்டு
அவசர உணவுக்கு மாறிவிட்டோம்,
ஆரோக்கியத்தை நாம் இழந்து
ஆயுள் முடிந்துப் போகின்றோம்!

விவசாயிகளின் வேதனை
வேரோடு அழியட்டும்,
இனியதொரு நல்ல நிலை
இனியாவது மலரட்டும்,

க. சுபாஷினி,
தமிழ்த் துறை..
சென்னை கிறித்தவக் கல்லூரி

# ஹைக்கூ கவிதைகள்

கட்டட வேலையில் பெண்
கண்ணாக இருக்கிறாள்
வேப்பமரத் தூளி மீது

பறக்கும் திறன்
வியக்க வைக்கிறது
தும்பியின் ஞாற்சி நிலை

நீர் நிறைந்த வயல்
குத்தாட்டம் போடுகிறது
கல் மழை

ஒற்றையடி பாதை
காட்டுக்குள் செல்கிறது
தனியாக ஒரு நத்தை

தூளியில் குழந்தை அழுகை
குறையவே இல்லை
மேஸ்திரியின் கண்டிப்பு

பயணியின் மரணம்
வீதியில் பரபரப்பாக இயங்கும்
புகைப்பட ஆர்வலர்கள்

வேலையில்லாப் பட்டதாரி
வாழ்க்கைச் சுமையோடு போராடும்
வாங்கிய தங்கப் பதக்கம்

வீறிட்டழும் பாப்பா
ஜன்னல் கம்பியைப் பற்றியபடி
அடுத்த வீட்டில் முதிர்கன்னி



**Dr.ஜலீலா முஸம்மில்**
**ஏறாவூர்.. இலங்கை**

வண்ண மலரே அருகே வா
வண்ண மலரே அருகே வா
வால் முளைத்த ரோசாப் பூவே

மயங்கியே நிற்கிறேன்
மங்கையே உன்னழகில்
வண்ணத் தோற்றம்
வாவென அழைக்குதே

வீசுந் தென்றலென
வாவென அழைக்கிறாய்
விண்ணின் தேவதையே
விரைந்துவா என்னருகில்

நீலமயில் அழகியே
நேசத்தை தந்திடுவாய்
பாசமுடன் அணைத்து
பாமாவை சூட்டிடுவேன்

கற்பனை உலகினிலே
கவிதையாய் தவழுகிறாய்
கண்மணியே காத்திருக்கேன்
தினந்தோறும் வருவாயா?

**புவனா சற்குணம்**
**கனடா**



# தேவதைகளின்
## கரங்களில் உலகம்




செ.புனிதஜோதி
சென்னை


சூரியன் கைவிரல்களை நீட்டியும் நீட்டாமலும் நெளித்து விட்டுக் கொண்டிருக்க, வானம் விடியலை வரவேற்க முன்னெடுத்துக் கொண்டிருந்தது. புள்ளினங்கள் ஒவ்வொன்றாய் தன் சிறகை ஆயத்தப்படுத்த தொடங்கின. இலைகளின் மேல் முத்தத்தைப் பதித்திருந்த பனித்துளி மூக்குத்தியைப் போல் தோற்றமளித்தது அந்த மலையடிவாரத்து மரிக்குண்டு கிராமம்.

அங்கே விவசாயம் தான் பிரதான தொழிலாக இருந்தது. விருமாயி எழுந்தவள் சாணத்தை கரைத்து வாசலைத் தெளித்து கோலம் போட ஆரம்பித்தாள். அதன் பிறகு மாட்டுக் கொட்டகையில் சாணத்தை அள்ளி குடையில் சேகரிக்க, விருமாயின் கணவன் விருமாண்டி மாடு, கன்றுகளைப் பத்திக்கொண்டு தோட்டத்திற்கு விரைந்தான்.

பிள்ளைகளை எழுப்பி, காலைக்கடனுக்கு அனுப்பி வைத்தாள்..“வெரசா போங்கடி

பன்னி பிடிக்கிறவைங்க வந்துருவாங்க என்றாள்”

அவளுக்கு மூன்றுமே பெண்பிள்ளைங்க. மூத்தவ பேரு சற்குணம் எட்டாவது படிக்கிறாள். ரெண்டாதவ பேரு சரஸ்வதி அஞ்சாவது படிக்கிறாள். கடைசி பொண்ணு மீனா இரண்டாவது படிக்கிறாள். மூன்றுமே சமத்து பிள்ளைக.


கடைசி பொண்ணு மீனா “நான் போக மாட்டேன் எனக்கு வரல” என்று வாதாடினாள்

“அம்மா அவ பன்னி முண்ட வருதுல்ல அதனாலதான் வர மாட்டேங்குறா” “அடியே சிலுப்பட்ட பள்ளிக்கூடம் போகும்போது வருதுன்னு சொல்லி என் உசுர வாங்குவ ஒழுங்கா போயிடு விளக்கமாத்த எடுத்தேன் பிச்சுடுவேன்.” “உங்க அப்பனுக்கு கஞ்சி கொண்டு போகணும் தோட்டத்துல வேல ஏகப்பட்டது கிடக்குது மறுவாதியா போயிட்டு பள்ளிக்கூடம் போறதுக்கு வழியப் பாரு” என்று கத்த ஆரம்பித்தாள்.

அம்மாவின் வசவுக்குப் பயந்து கொண்டு மூவரும் வேகமாக நடந்தனர். கழிப்பறை வசதி இல்லாத காரணத்தால் மந்தை காட்டுக்கு போக வேண்டி இருந்தது. அங்கே பன்னியின் தொந்தரவும் பன்னி மேய்ப்பவர்களின் தொந்தரவும் அதிகமாக இருந்தன. அதன் காரணமாகவே விடியும் முன்னே போயிட்டு வந்துருவாங்க. வயிறு சரியில்லாத நேரத்துல மாதவிடாய் காலத்துல பொம்பளப் புள்ளைங்க சங்கடப்பட்டு போயிடும். பன்னியை விட பன்னி மேய்க்கிறவங்க பார்வ சரியிருக்காது அத்தனையும் கடந்து தான் பெண் பிள்ளைகள் போயிட்டு வந்தாங்க.

விருமாயி அதற்குள்ள பிள்ளைகளுக்குத் தேவையான சாப்பாடு செஞ்சு வச்சுட்டு தோட்டத்துக்குக் கிளம்பினாள். “அடியே பெரியவளே பாத்திரத்தை விலக்கி வெச்சிடு சின்னவள குளிப்பாட்டி மூணு பேரும் சண்டை போடாம சாப்பிட்டு பள்ளிக்கூடத்துக்குக் கிளம்புங்க. சாப்பாட மறக்காம எடுத்துகிட்டு போங்கடி” என்று சொல்லிவிட்டு தூக்குவாளியில் விருமாண்டிக்குக் கஞ்சி தண்ணியும் கொத்துவாளையும் எடுத்துக்கொண்டு கிளம்பினாள்.

பிள்ளைகளும் அம்மா சொன்னமாதிரியே சமத்தா பள்ளிக்கூடத்துக்குக் கிளம்பி போனாங்க. சத்துணவு சாப்பாடு பள்ளிக்கூடத்துல போட்டாலும், பிள்ளைகளுக்குப் பிடிக்காதுனு சூடா சமைச்சுதான் தரச் சொல்வான் விருமாண்டி. பள்ளிவிட்டு வரும் பிள்ளைகளுக்குத் திண்பண்டம் வாங்கி வந்து வைச்சிருவான். பிள்ளைகள அடைகாக்கும் கோழியைப் போலக் கண்ணும் கருத்துமா பார்த்துக்கிருவான். இதற்காகவே விருமாயிக்கும் அவனுக்கும் சண்டை வரும்.



"போற இடத்துல இப்படியெல்லாம் கிடைக்குமா. பிள்ளைகள ஒரு வேலையும் சொல்ல மாட்டுற. நாளைக்கு எனக்குத் தான் வசவு கிடைக்கும் என்ன பிள்ள வளர்த்திருக்கானு" .

"அடிப் போடி போக்கத்தவளே பிள்ளைக நம்மகிட்ட இருக்கிற வரதான் அதுகளுக்கு சந்தோஷம் உனக்கு எங்க அதெல்லாம் புரியப்போகுது" இப்படி அவர்களுக்குள் வாக்குவாதமும் நிகழும்.

கஞ்சிகொண்டு போன விருமாயி "ஏ மச்சான் சாப்பிட வா". கூப்பிட "ஏண்டி பிள்ளைக சாப்பிட்டு பள்ளிக்கூடத்துக்கு போயிடுச்சா? "போயிடுச்சுங்க. நீர் வாரும்" என்றாள்.

கால் ஏக்கர் சொந்தமான கழனி நெல், வெங்காயம், தக்காளி, காய்கறி, பூச்செடி, வாழைமரம், தென்னை மரம் உயிரக் கொடுத்து வளர்த்திருந்தான். இரண்டுமாடு, இரண்டு கன்னு , இரண்டு ஆடு, இதுதான் அவனுடைய சொத்து. இதெல்லாம் விட பிள்ளைகன்னா உசுரு. காலையில் போனா பொழுது சாயும் வரை புருசனும், பொண்டாட்டியுமா தோட்டத்துல வேலபார்த்து திரிவாங்க.

பிள்ளைகளும் கெட்டிக்காரப்பிள்ளைக நல்லா படிக்குங்க. சற்குணம் பள்ளிவிட்டு வந்தவுடனே உல வைச்சு சோறு வைச்சுருவா. நடுவூலவ வீட்ட சுத்தப்படுத்தி படிக்க உட்கார்ந்துருவாங்க. அப்பா,அம்மா வந்து குளிச்சு ஒண்ணா உட்காந்து சாப்பிடும்போது பள்ளிக்கூடத்துல நடந்த கதையை ஒருத்தர் மாத்தி ஒருத்தர் சொல்லுவாங்க. விருமாண்டி தலையாட்டிக் கேட்பான். வாசலில் உட்கார்ந்து அக்கம் பக்கம் கூட பேசிச் சிரிச்சு பிள்ளைக கொஞ்சம் நேரம் விளையாண்ட பிறகு தூங்க போவான். இப்படி மகிழ்ச்சியா இருந்த குடும்பத்தில இடிவிழுந்தமாதிரி துக்கம் இருட்டிக்கிட்டு வீட்டுக்குள் புகுந்துருச்சு.

ஒரு மதிய நேரத்துல வயித்து வலிக்குதுன்னு பெரியவ மந்தக்காட்டுக்கு தனியா போனா. கழத்து மேட்டுக்கு விருமாயி போயிருந்தாள். பக்கத்து வீட்லயும் யாரும் இல்ல தனியா வேகாத வெயில வயித்து வலியோட போனவள பன்னி மேய்க்கிறத விட்டுட்டு ஒரு காலிப்பய சற்குணத்த விரட்டிப் பிடிச்சு அவள கதற கதற கெடுத்துட்டான். பிள்ள குத்து உயிரும் கொற உயிருமா வீடுவந்து சேந்து வாசல்ல மயங்கி விழுந்துருச்சு.

விருமாண்டியும்,விருமாயிம் குய்யோ மிய்யோனு கத்திக்கிட்டு பிள்ளைய ஆஸ்பத்திரில சேர்த்தாங்க. கிராமத்துக்கே விசயம் பரவிருச்சு. ஊருக்குள்ள போலீஸ் வந்து அவன அரஸ்ட் பண்ணிருச்சு. அதுக்குப் பிறகு வீடே கலை இழந்து போயிருச்சு எப்ப பார்த்தாலும் கண்ணீரும், கம்பளையுமா விருமாயும், சற்குணமும் கெடந்தாங்க. விருமாண்டி எவ்வளவு தேத்தியும் வீட்ட கலகலப்பா மாத்த முடியல.

சற்குணம் பள்ளிக்கூடம் போறத
நிறுத்திடுட்டாங்க
இத கேள்விப்பட்ட மேரி டீச்சர்
வீட்டுக்கே வந்துட்டாங்க

விருமாயி கிட்டயும் விருமாண்டி கிட்டயும் பேசத் தொடங்கினாங்க. 'என்ன விருமாண்டி சார் காட்டுல நடக்கும்போது முள்ளு குத்தி போகுது அதற்காகக் காலை வெட்டுவீங்களா இல்ல காட்டுக்குப் போகாம இருப்பீங்களா சொல்லுங்க சார்?. "அந்தப் பொறுக்கிப் பையனால தவறு நடந்துருச்சு அதுக்கு

சற்குணத்த பள்ளிக் கூடத்துக்கு அனுப்பாம இருந்தா என்ன நியாயம்? "உடல் என்பது வெறும் எலும்புகளாலும் சதைகளாலும் ஆனது ." அதை ஏன் மானம் மரியாதைன்னு பெயர் வைச்சு உங்கள நீங்களே குற்றாவாளியா மாத்திக்கிறீங்க. "நீங்க ஏன் கவலைப்படுறீங்க . தப்பு பண்ணுனவங்க எல்லாம் உலகத்தில் வாழும் போது நம்ம சற்குணம் என்ன செய்தாள்?



சற்குணம் உடனே ஓடி வந்து"டீச்சர் எனக்கு வாழவே பிடிக்கல டீச்சர்"என்று ஓவென்று அழுதாள்." சற்குணம் இதெல்லாம் ஒன்றுமே கிடையாது நம்ம உடம்பை விட மனசு சுத்தமா இருந்தா போதும்."நீ நல்லாப் படி வேலைக்குப் போ, கல்வி உனக்கு எல்லாமே தரும்.. அறிவு ஆற்றல் துணிவு தரும் .

"யாருக்குமே தெரியாத என் வாழ்க்கையச் சொல்றேன் கேளுங்க."ஓடும் ரயிலில் பத்து பேர் சேர்ந்து கூட்டுப் பலாத்காரம் செஞ்சு முள் செடியில தூக்கிப் போட்டுட்டாங்க ஆடு மேய்க்கிறவங்க என்னைய காப்பாத்தி எங்க வீட்டுல கொண்டு போய் சேர்த்தாங்க. எங்க அப்பா அம்மா எனக்கு மிகவும் பக்கபலமா இருந்தாங்க..

உறவுகள் எல்லாம் ஒரு மாதிரி பலவிதமா பேசினாலும் அதையெல்லாம் நாங்க பொருட்படுத்தவே இல்ல

உடலில் பலவிதமான அறுவைசிகிச்சை பலவிதமான உடல் உபாதைகள் என்னைத் துரத்தினாலும், எங்க அப்பா, அம்மாவ அவமானபடுத்திய உறவுகள் முன் வாழவேண்டும்னு நினைச்சேன். இந்த உறவுகளுக்கு முன்னாடி நம்ம வாழ்ந்து காட்டணும்னு நான் படிக்க ஆரம்பிச்சேன். பல தங்கப் பதக்கம் வாங்கினேன் தலைமையாசிரியரா இந்தப் பள்ளியில் வந்து சேர்ந்தேன். "தன்னுடைய வாழ்க்கையை சொல்லி முடிக்கும் போது எல்லோர் கண்களிலும் கண்ணீர் வழிந்தது.

"சற்குணத்த என்கூட அனுப்பி வைங்க என்னோடு தங்கிப்படிக்கட்டும். நீங்களும் அடிக்கடி வந்து பார்த்துட்டு போங்க "என்று டீச்சர் சொன்னவுடன், விருமாயி தயக்கம் காட்டினாலும் விருமாண்டி சரின்னு ஒப்புதல் தரச் சம்மதித்தான். "சரிங்க டீச்சர்" உங்க விருப்பம்."என் பிள்ள சந்தோஷமா இருந்தா போதும்" என்றான். "அவ நல்லபடியா படிச்சு பெரியாள வந்தா அதுபோதும்" ."அவ நல்ல படிக்கிற பொண்ணு தானே.என்ன சற்குணம் என் கூட வருகிறாயா?" "வாரேன் டீச்சர்" என்றாள்.

அதுக்கு முன்னாடி விருமாண்டி இந்த ஊருக்கு நீங்க ஒரு பொதுக் கழிப்பறையைக் கட்டுவதற்கு அரசாங்கத்துல மனு கொடுங்க. அதற்காக என்ன உதவினாலும் நான் செய்றேன் என்றார் டீச்சர்."ஆமாம டீச்சர்

பிள்ளைக ரெம்ப கஷ்டபடுதுங்க” விருமாயி சொன்னாள்.

டீச்சர் சொன்னபடி சற்குணம் டீச்சரோடு தங்கிப் படிக்க ஆரம்பித்தாள். டீச்சர் உதவியோடு விருமாண்டி மனு கொடுத்து மரிகுண்டு கிராமத்துக்குப் பொதுக்கழிப்பறை கட்ட அனுமதி கிடைத்தது. கழிப்பறை கட்டும் வரை கிராம மக்களே அரசாங்கத்துக்குத் தேவையான உதவி செய்து கட்டி முடித்து மேரி டீச்சரை வச்சு கழிப்பறையைத் திறக்க வைச்சாங்க.

பலவருஷம் கழிச்சு மரிக்குண்டு பள்ளிக்கூடத்துக்குப் புது கலெக்டர் வராங்கன்னு பள்ளிக்கூடமே ஒரே ஆர்ப்பாட்டமாய் இருந்தது. ஜீப்பை விட்டு இறங்கியது நம்ம சற்குணம். ஊரே வாய்பிளந்து பார்த்துச்சு.

மேடையில் பேச ஆரம்பித்தாள் சற்குணம் “கல்வி பெண்பிள்ளைக்கு அவசியம். ஆண்பிள்ளைகளைப் போலப் பெண்பிள்ளைகளும் சக மனுசிகள். அவர்களுக்கும் உணர்வும், உணர்ச்சியும் உண்டு அவர்களை மதிக்கக் கற்றுக்கொடுங்கள். பெண்பிள்ளைகளுக்கு ஏதாவது பிரச்சனை என்றால் முடக்கிவிடாதீர்கள். மனசு விதை மாதிரி நல்லதை விதைத்தா நல்லது தான் கிடைக்கும். மனசை கழிப்பறையா மாத்திடாதீங்க. அவர்களுக்குத் தைரியத்தைக் கொடுங்க. நீங்களும் இந்த உலகில் வாழப் பிறந்தவர்கள்னு சொல்லி வளருங்கள். என்று அச்சமில்லை அச்சமில்லை அச்சம் என்பதில்லை” பாரதியார் வரிகளை உணர்ச்சி பொங்க சொல்லி முடித்தாங்க

“உங்களுக்கு ஒரு நல்ல செய்தி சொல்லப்போகிறேன். இப்ப எல்லா வீட்டுக்கும் அரசாங்கமே கழிப்பறை கட்டித்தரும் உத்தரவ வாங்கி வந்திருக்கேன்” என்ற சொன்னவுடன் கிராமமே கைதட்டியது. பராவயில்ல விருமாண்டி உம்மக நல்ல விசயம் செஞ்சிருக்கா. சற்குணம்னா சும்மாவா சொல்லும் போது மேரி டீச்சர் கண்ணில் நிழலாடினாள்.

இதையெல்லாம் பக்கத்திலே இருந்து பார்த்த மனசு குளிர்ந்து போயிச்சு. “ஏன்னத்த நல்லாயிருக்கையா” கையை பிடிச்ச போது கட்டித் தழுவிகிட்டேன் சற்குணத்த.



# கல்லறையில் உறங்கும் நிறைவேறாதவைகள்



தாத்தா பணி ஓய்விற்குப் பின்
வந்த பணத்தில் கிராமத்தில் ஆசையாகக் கட்டிய வீட்டில்,
தாத்தாவின் 15 ஆம் நாள் காரியத்திற்கு
உறவினர்கள் புடைசூழ
தாத்தா புகைபடத்தில்
சிரித்தமுகத்துடன் நின்றிருந்தார்.
பல்லாயிரம் எண்ணங்களை உள்ளடக்கியதாக-
பழைய நினைவுகளில் மனம் பயணிக்கத் தொடங்கியது...


தாத்தாவிற்கு இரண்டு ஆண்,
மூன்று பெண் குழந்தைகள்.
அரசு பணி, ஆனால், நேர்மையான பயணம்
பெண் பிள்ளைகள்
பள்ளிப் படிப்பை முடிக்கும் முன்பே
திருமணப் பந்ததிற்கு நிர்பந்திக்கப் பட்டனர்.

மூத்த மகனுக்கு அண்டை மாநிலத்தில் மத்திய அரசு பணி,
வருடத்திற்கு ஒரு முறை வந்து செல்வது வழக்கம்.

இளைய மகனுக்கு மருத்துவம் சார்ந்த பணி ,
அவர்களுக்கு உதவியாக இருக்க வேண்டிய சூழல் ..

தாத்தா , பாட்டிக்கு. வருடங்கள் உருண்டோட
தாத்தாவின் எண்ணம்
வயோதிக காலத்தைத்
தான் கட்டிய கிராமத்து வீட்டில்
செலவிட வேண்டும் என்று.
தாத்தாவின் எண்ணம் நிறைவேறவில்லை.

இன்று கிராமத்து வீட்டில்
தாத்தா புகைப்படத்தில் மட்டுமே
சிரித்துக் கொண்டு நிற்கிறார்.
அவரின் ஆசைகள் கல்லறையில்
புதைக்கப்பட்டிருக்கலாம்.



**ச.காயத்ரி**

# குறுக்குவழிகள்

## வாழ்க்கையைக் குறைக்கின்றன



குறுக்குவழிகள் எளிதில் சென்றடையும் ஒருவழிப்பாதை
திரும்பி வர இயலா மரணப்பாதை..........
கயவர்கள் விரும்பிப் பயணிக்கும்
நிரந்தரமில்லாப் பாதையே குறுக்குவழிகள்.......
கோடிகோடியாய் குவித்தாலும் குறுக்குவழிகள்
வலியையே பரிசாய் வழங்கும் .......
குறுக்குவழிகள் குற்றஉணர்ச்சியையே பிறப்பிக்கும்
நேர்மையின் வழிகள் முகத்தெளிவைத் தந்திடும்........
இருட்டில் பயணிப்பது போன்றது குறுக்குவழிகள்........
பரிதியின் ஒளியில் பயணிப்பதே நேர்மையின் வழிகள்.......
கழிவுநீர் போல் மாசுபடிந்தவை குறுக்குவழிகள்
விசும்பின்துளிபோல் தூய்மையானவை நேர்வழிகள்........
புவனமும் அதன் நேர்பாதையில் சுற்றினால்தான்
இரவுபகல் காலநிலை மாற்றங்கள்........
குறுக்குவழியில் பயணிக்க எத்தனித்தால்
உயிர்கள் நிலைக்கா ஞாலத்தில் ........

நேர்கொண்ட வழிகளே வரலாற்றின்
காலக்கோடுகளை வலிமையாய் நிரப்பும்.......
எண்ணத்திலும், நடத்தையிலும்
குறுக்குவழியைத் தவிர்ப்போம்.........
குறுக்குவழிகள் வாழ்க்கையை மட்டுமல்ல
சகலத்தையும் குறைக்கின்றன.......

**ம.அமிர்தா தமிழரசன்,**
**தேனி.**

நிரந்தரத்தை அள்ளித்தரும் நேர்வழியில் பயணிப்போம்
ஞாலத்தில் ஞாயிறுபோல் இனிதே வாழ்வோம்.......

ஆழ்மனமே எம்மை ஆழும் மனமே
ஆண்டவனின் படைப்பின்
அதிசயம் இதுவே
இன்பமோ துன்பமோ
இதயத்தில் தங்கிடும்
நினைக்காத நேரத்திலும்
நினைவுகளைத் தூண்டிவிடும்
பகைமை பழிவாங்கல்
பயத்துடன் பின்வாங்கல்
அசுரக் குணங்களுக்கும்
அடைக்கலம் ஆழ்மனமே
என்றொருவன் தன்னை
உணர்கிறானோ அவன்
சஞ்சலமில்லா சாத்வீக
வாழ்விற்கு சொந்தக்காரன்

**யோகா அருணகிரிநாதன்**
**நோர்வே**

## ஒய்யாரக் கொண்டைக்காரி

ஓரக்கண் பார்வையாலே
மயக்குறியே மாயக்காரி
சிவந்த உதட்டினிலே
அழகு சிரிப்புக்காரி
கழுத்து நிமிர்ந்தவளே
உடுக்கை இடுப்புக்காரி
மஞ்சள் நிறத்தினிலே
மங்காத உடம்புக்காரி
நெஞ்சை அள்ளுறியே
ஒய்யாரக் கொண்டைக்காரி

**உமா கணேசநாதன்**

ஆழ்மனதின் உணர்வலைகள் உறங்காது ஒருபோதும்
எண்ணங்கள் வண்ணங்களாய் இதயத்தில் குடியிருக்கும்
தனிமையிலே தவிக்கையில் தடம் மாறும்
தனிமரமே தோப்பாகித் தென்றல் வீசும்
அடிமேல் விழும் அடிகள் அசைக்காது
ஆங்காங்கு வேதனைகள் வரும் போது
உள்ளம் துள்ளும் உயிரை உரசும்
ஆனாலும் அத்தனையும் அடங்கிவிடும் கணப்பொழுதில்.

**கதிர்காமநாதன்**
**கனடா**

## ஆழ்மனதின் உணர்வலைகள்..

தனிமையின் பிடியிலே தவித்திடும் பொழுதிலே
இனிமையாய் உரிமையாய் உள்ளூறும் நினைவுகளே
தலைகோதும் விரலாக நகர்ந்திடும் உரையாடல்
உள்ளத்து இசையோடு சிரிப்பெனக் கவிபாடும்
சிலநேர மௌனமாய்க் கடந்திட்ட பாதைகள்
கூரான முள்ளென உதிரத்தில் பேயாடும்
என்னென்ன சொன்னாலும் மனமாளும் வல்லவனாய்
உள்ளத்து உணர்வலைகள் உதிராமல் தொடர்பாகும்

**திருமதி சனுஜா முகம்மது சப்ரி**
**மூதூர்**

## காற்றின் இசை

இயங்குதலின் இயக்கமாய்
இருக்கும் உயர்வானது.
இராகம் எதுவெனக் கூறிட
முடியாதது.
கலந்திடும் ஓசைகள்
கணக்கில் அடங்காதது.
காற்றின் இசை மூச்சுடன்
கலந்தது.

**கவிஞர் புலத்தூர் தனபாலன்**

# இராபர்ட் பிராஸ்ட் கவிதை

## தமிழில் மொழி பெயர்ப்பு: – பேராசிரியர் மு.விஜயகுமார்

பருத்த வெண்மையான சிலந்தி ஒன்று மெண்மையான வெண்பட்டு மலரின்
மீது அந்துப்பூச்சியினை
பற்றுவதைக் கண்டேன் .
அவைகள் பளபளக்கும் பட்டுத்துணியைப் போல
எங்கும் பரவியிருந்தது.
இறப்பு மற்றும் பிணியின் கதாபாத்திரங்களாகத் தோன்றியது.
மந்திவாதி பருகும் பாணம் போல
ஒவ்வொரு நாளின் விடியலும்
இவைகள் கலந்தே தொடங்குகிறது.
பனிஉதிரும் சிலந்தியோ வெண்மை
நுரைபொங்கும் மலரின் மீது
பறக்கும் காகிதப் பட்டத்தைப் போல
இறப்பின் இறகுகளைச் சுமந்து வருகிறது.
வெண்மையான மலரின் நிலை என்ன ?
களங்கமற்ற பூக்கள் என்ன செய்யக்கூடும் ?
சிலந்தியை உயரே கொண்டுவந்த
மாயாவியே அந்துப்பூச்சிக்கு வழிகாட்டியாக இருந்திருப்பார்.
இரவின் பயங்கர வடிவமைப்பே என்ன !

படைத்தவனின் இந்தக் கட்டமைப்பே
இந்தச் சிறிய செயலையும் நிர்வகிப்பது மிகவும் நேர்த்தியே !!.



(இராபர்ட் புரொஸ்ட் (Robert Frost, மார்ச் 26, 1874 – சனவரி 29, 1963)
அமெரிக்காவிலுள்ள சான் பிறான்சிஸ்கோவில் பிறந்தார். ஆங்கிலத்தில் எழுதினார். இலக்கிய விருதான புலிட்சர் விருதினை நான்கு முறை பெற்றுள்ளார். கவிஞர், எழுத்தாளர், கல்வியாளர், நாடகாசிரியர்.. முதல் நூலான ஒரு சிறுவனின் தீர்மானம் 1913 இல் வெளிவந்தது.பொஸ்ரனின் வடபுறம்; (1914), மலை இடைவெளி (1916) முதலிய நூல்களையும் வெளியிட்டுள்ளார். 1963 இல் மரணமானார்.)

## *சிப்பிக்குள் முத்து*



ஆழ்கடலின் நடுவினில் மூழ்கிச் சென்றங்கு
சிப்பியைக் கையிலேந்தி முத்தெடுத்து வந்தவனே
கருவறையில் தாயவளும் தாங்கினாள் அவ்வாறே
மூழ்காது முத்தெடுத்தான்
உன்தந்தை இன்றுன்னை
மிளிர்கின்ற அழகினிலே மீட்டெடுக்கும் நினைவுகளை
உன்னாலே பார்க்கிறேன் எனதருமைச் செல்வமே
ஒளியான என்வாழ்வில் நீயொரு ஆனந்தமுத்து!!!

**ஜயந்தினி வாகீசன்**




### மரியாதை

மரியாதை தெரிந்தோர்
கொடுப்பர் வாங்குவர்
வாங்குவர் கொடுத்ததை
மனதினில் மகிழ்வர்
மகிழ்வர் மகிழ்விப்பர்
பண்புடன் வாழ்பவர்
வாழ்பவர் சுற்றத்துடன்
தெரிந்தவர் மரியாதை

**வனஜா.உதயகுமாரன்**
**நோர்வே**

## *'வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ் மொழி'*




தேன் மதுரத்தின் தீஞ்சுவையே செந்தமிழே
தேசங்கள் யாவிலும் ஒலித்தல் வேண்டுமென்றே
எட்டயபுரத்தான் பாரதியும் பட்டையைக் கிளப்பினாரே
பண்டைய முதுமொழியிலே பழமை புதுமையென
கொண்ட புகழ் மாறாதிருப்பதும் நம்தமிழே
முண்டாசுக் கவிஞரின் கனவுகளே நனவாகியதே
கொண்டாடுவோம் நாமே குவலயம் முழுவதிலும்
வாழ்க நிரந்தரம் தீந்தமிழ் வாழியவென்றே

***சற்குரு பேரின்பநாயகம்***
***பிரான்ஸ்***

# அகமருந்தான அத்தர்

**( மொழி பெயர்ப்புக்கான சாகித்திய அகாதெமி விருதை இவ்வாண்டு பெற்ற எழுத்தாளர் கே.நல்லதம்பி அவர்களின் அத்தர் சிறுகதைத் தொகுப்பை முன்வைத்து )**




புழுங்கவில்லை என்றாலும் கூடப் புறச்சூழல்களினூடே நம்முள் கூடிக்கொண்டேயிருக்கிறது ஏதேனுமொரு குப்பை. அப்படியான அழுக்கு சுமந்தவாறு உலவும் மனங்களை உலர்த்தி அந்தரத்தில் காயப் போடுகிறது எழுத்தாளர். கே. நல்லதம்பி அவர்களின் அத்தர் சிறுகதைத் தொகுப்பு.

வாழ்வை நறுமனமாக்கிக் கொள்வதும் நரகலாகிக் கொள்வது புறத்திருந்து தீர்மானிக்கப்படுவதில்லை. அவற்றை அகச்சீர்மையே பகுத்துத் தீர்மானிக்கிறது. எந்திரமயமான இந்தச் சுற்றுச் சூழலில் பௌதீக ரீதியான கற்பிதங்கள் பெருகிக் கொண்டே போகிறது. இதை மன நிர்வாகம் மட்டுமே சமதையாக்கும்.



*எழுத்தாளர் கே.நல்லதம்பி*

எடையற்ற வாழ்வைப் பெற வேண்டுமெனில் நாம் நிபந்தணையற்ற அன்பையும், சூதற்ற காமத்தையுமே அணுக வேண்டியுள்ளது. இழந்த காதலின் வலியும் , கைவிட்டுப் போன காமத்தின் ஆற்றாமையுமாக அசைபோடுகிற நினைவுகளும் கூட வாழ்வை எடையறதாக்கி விடுகிறது. பாசாங்கற்ற இன்புறுதலை நமக்கு

வண்ண வண்ணமான பானங்களில் பருகத் தருகிறது இவரது சிறுகதைத் தொகுப்பு அத்தர்.

மொழித்திருகலற்ற எளிய நடையில் புதுசுகந்தம் வீசி நகர்கிறது கதைகளினூடான இவரது எளிய உவமைகள். கதைப்போக்கிலிருந்து விலகாமல் மனநெருக்கம் கூடி படைப்பை அனைத்தபடியே நகர்கிறது.

பெண்ணுறவின் அற்புதங்களைக் காதலி, மனைவியென உறவு நிலைகளுக்கேற்ப பேசுகிறது. "அவள் இறுகப் பற்றிக் கொண்டபோது பனிக்கட்டியொன்று நெருப்பில் விழுந்தது போல் இருந்தது" என்கிறார். இறுக்கிப் பிடிக்கிற யாவுமே சிந்தக்கூடும் என்ற ஓஷோவின் தளர்வுத் தன்மை இவ்வுறவுகளில் நம்மை இணக்கம் கொள்ள வைக்கிறது.


குழந்தைமையையும் , மாயத்தையும் குழைத்த ஜென் தன்மைக்குள் நம்மை ஓசையற்று தியானிக்க வைக்கிறார். அவள் ஒரு பட்டாம் பூச்சியைத் துரத்திக் கொண்டு ஓடும் போது அது குழந்தையின் செல்லத் தத்தலோடு பறந்து பறந்து அமர்கிறது அவளால் அதைப் பிடிக்க முடிவதில்லை. அப்போது அவன் அவளிடம் "அதைத் துரத்திக்கொண்டு ஓடாதே கண்மூடி அந்தக் கல்மீது உட்கார் அது உன்னிடம் வரும் என்கிறான். அது ஒரு ஜென் தன்மையான பண்பு நிலை. அவளும் அருகிலிருக்கிற பாறை மீது ஐந்து நிமிடம் கண்மூடி உட்காருகிறாள். அந்தப் பட்டாம் பூச்சி மெல்ல பறந்து வந்து அவளை ஒரு சுற்று சுற்றி அவள் கைமேல் உட்கார்ந்து கொள்கிறது.

பெண்ணுகுள் ஜென் நுழைகிற போது உடன் லயிப்புகூடி கூடுதல் ஒளிர்வு கொள்கிறது. கலவியினூடே ஒற்றைப் புள்ளியில் குவிகிற உச்ச இன்புறுதலில் இந்தப் பிரபஞ்சமும் கூடத் தன்னை ஒப்புக் கொடுத்து உன்மத்தத்தை பெருக்குகிறது என்று தந்த்ராவும் கூறுகிறது.

"ஒன்றை தீவிரமாக விரும்பினால் அதை அடைய வானுலகமே நமக்கு சாதகமாக வேளை செய்யுமாம்". என்று அவளிடம் அவன் சொல்லுவான். திடீரென அறிமுகமாகி ஒரு பெண்ணுடனான கலவியினூடாக நடைபெறுகிற இவ்வுரையாடல்கள் "தேகம்புதிது, ஆனால் அந்த ஸ்பரிசம், வாசம், நெருக்கம், கரைதல் எதிலும் மனம் உறுத்தவில்லை, என்னைத் தொலைத்துவிட்டது போன்ற ஏதோ ஒரு நிம்மதி" என்கிறார்.

காமத்திற்குள் ஒளிந்திருக்கிற தவத்தின் ஒன்றுதலை மென்னுணர்வின் ஆன்மாவைத் திறந்து காட்டுகிறது இவரது தமான் நெகாரா என்ற கதை. கலவி என்பது வறட்சியான சரீரப் பகிர்வு மாத்திரமல்ல. அது ஆன்மாவையும் கூடவே உவந்தளிக்கிற ஒரு பண்பு நிலை என்ற அன்பின் அடிச்சரடை நமக்குப் போதிக்காமல் நம்மோடு பகிர்ந்து கொள்கிறது. "என் கண்ணிலிருந்து அவள் உதட்டில் சிந்திய ஒரு துளியை அவள் நாக்கால் தடவினாள்" என்கிறார்.

மனமொத்த காமம் உடலை இறைமையாகவே பார்க்கிறது. நமது முன்முடிவுகளும் திட்டமிட்டிருக்கிற கால அட்டவணைகளும் காணாமல் போகிற இடம் இது. சூன்யம் போர்த்தியபடி ஒரு வெற்றிடத்தில் குமைந்து கொண்டிருந்த



மனம் ஒரு பூந்தோட்டத்தின் திறப்புகுள் நுழைகிறது.

நதியின் அண்மையிலிருந்து நாம் கடந்து விட்டாலும் கூட அதன் நீர்மை நம்மைக் குளிரச் செய்தபடியே இருக்கும். ஸ்ரீரங்கப் பட்டிணத்திலிருந்து ஸ்ரீரங்கநாதனை பாதாபிஷேகம் செய்து நகரும் தலைக்காவிரி, தஞ்சையை வளமையாக்கிவிட்டு நகர்கிறது. என் பாதையை நானே அமைத்துக் கொள்ளும் தேசாந்திரி நான். என் வளமையும் அழகும் எனக்கானது என் மீது தன் அதிகாரத்தை யாரும் செலுத்த முடியாது எனக் காவிரி தன்னியல்பில் பேசிச்செல்வதை தன் கதையினூடே சொல்கிறார்.

பழங்காதலியை இருபது ஆண்டுகள் கழித்து சந்திக்க நேர்கிற தருணம் அலாதியானது நமக்குள்ளும் அந்தச் சந்திப்பின் பதற்றத்தை தொற்றவிடுகிறார். கதையின் மையம் தனது முன்னாள் காதலியை சந்திப்பது என்றாலும் கூட அவர்கள் சந்தித்த பல்வேறு இடங்களும் , காலமும் பாத்திரங்களாக மாறி இவர்களின் காதலை பேசுகிறது. கதை சொல்முறையில் இது ஒரு புதுவகை சுவாரஸ்யம். ஸ்ரீரங்கப்பட்டணம், சர்வசுகந்திமரம், காலம், இவர்கள் சந்தித்த ஓட்டல், அவர்களின் நண்பர்கள் என எல்லாமுமே இந்த ஒற்றைக் காதலை தனித்தனியாகச் சிலாகித்து கொண்டாடுகிற புது உத்தியைக் கையாண்டிருக்கிறார்.

“நீர்ப்பறவைகள் வருகின்றன, போகின்றன. அதன் சுவடுகள் அழிந்து போய்விடுகின்றன. ஆனால் அது பாதையை மறப்பதில்லை” என்று ஒரு ஜென் கவிதை உள்ளது. காதலர்கள் தம்போக்கில் கலைந்து கொண்டேயிருந்தாலும் கூடக் காதலின் தடம் மட்டும் அந்நினைவுகளை காதல் கொண்டபடியே இருக்கிறது.

இப்படியாக இவரது கதையில் இவர்களது சந்திப்பின் ரம்மிய தருணங்களை, இன்புறலை காலமும், வெளியும் பேசிக் களிக்கிறது. காதலை மட்டும் பிரபஞ்சம் எப்போதுமே தன் சுகந்த ரகசியங்களாகத் தேக்கி வைத்துக் கொள்கிறது போலும். “அவன் என்னைப் பார்க்கும் போது என் மெய் மனங்களில் ஆயிரம் பூப்பூக்கும்


என் தேகத்திலிருந்து ஒரு விதமான மனம் வெளியேறும் . அவன் என்னைப் பார்க்கும் போது ஏதோ வாசனையை முகர்வது போல் மூச்சை உள்ளிழுப்பான் ” எனக் காதலி தன் நினைவுகளினூடே ரகசிய களிப்புறுகிறாள்.

தன் காதலி காதலை முறித்துக் கொள்கிற விலகலை தன்னியல் பேசுகிறது. “வயிற்றுக்கு ஈரத்துண்டை கட்டிக்கொண்டு கதகதப்பாக குடும்பம் நடத்த முடியுமா” என்று தன் காதலை முறித்துக் கொள்கிறாள். “அவளுடைய அகலமான கண்களின் பார்வை எனக்குள் இன்னும் கண் மூடாமல் இருக்கிறது” என்ற நினைவாற்றாமையில் உழல்கிறான்.

இருபதாண்டுகள் கழித்து அவளைச் சந்திக்கிற தருணத்தின் உறைந்த மௌனத்தை நம்மிடமே பூர்த்தி செய்ய விடுகிறார் ஆசிரியர் நல்லதம்பி அவர்கள். எண்ணெய் தீர்ந்த பின்னும் திரி கருகி தீர்ந்த பின்னும் மீதமாவது ஒளியென்ற ஒன்றுதானே என்ற கல்யாண்ஜி அவர்களின் கவிதையைப் போலவே வாழ்வின் எல்லா தருணங்களும் இருளடைந்த பின்னும் மனக்குகையின் ஒளியாய் மிஞ்சுவது காதல் மட்டும்தானே. தரையில் வீழ்ந்த வெண்கலத் தட்டின் சுழலோசையைப் போலவே உருண்டு கொண்டேயிருக்கிறது கார்வையான காதலின் நினைவு. பிங்க் அண்ட் ப்ளூ என்ற இக்கதை காதலின் மனக்கலவையை நம் மீது வண்ணங்களாக வீசுகிறது.

பூத்தபடியும் உதிர்ந்த படியுமே நகர்கிறது வாழ்வு. ஆனாலும் சருகொலிகளே நம்மைத் திரும்பிப் பார்க்க வைக்கிறது. இப்படியாகத்தான் அத்தர் கதை நம்மைத் திரும்பிப் பார்க்க வைக்கிறது. ஓசையற்றது வாசனை ஆனாலும் மனம் நிரம்புகிறது. ஓசை கூட்டுவது சருகு ஆனாலும் வெளியேறத் துடிக்கிறது. வாழ்வின் அந்திமத்தில் வாசங்கள் கெட்டிதட்டிப் போகிறது.

இந்தியாவில் அத்தர் என்பது விருந்தோம்பலின் ஆகப்பெரும் சடங்காகவே இருந்துள்ளது. நிம்மதியின்மையினூடாக நுழைகிற நறுமனம் மனமருந்தாகவே மாறிவிடுகிறது. நோய்களைப் பொசுக்கிற



குணமும் அத்தர்களுக்கு உண்டென ஆவணங்களோடு பதிவிடுகிறார். அத்தர் தயாரித்தல் அத்தர் விற்றல் என்று இந்தியாவின் வட மாநிலங்களில் பெருவாரியான தொழிலாகவே நடைபெறுகிறது.

வாழ்தலை வாசமுள்ளத்தாக்கவே நம் அணைவரின் விருப்பமாகவே இருக்கிறது. எஸ்.ராமகிருஷ்ணன் அவர்களின் யாமம் என்ற நாவலும் கூட அத்தர் தயாரித்தலையும் அத்தரின் முக்கியத்துவம் குறித்தும், இந்தியாவில் குறிப்பாக வட மாநிலங்களில் அத்தரின் பயன்பாடு ஒரு தொடர் சடங்காகவும் தொற்றிக்கொண்டதையும் விரிவாகப் பேசுகிறது.

அத்தர் கதை சொல்முறையில் மிகவுமே வசீகரிக்கிறது. உறையிட்ட பிரிக்கப்படாத கடிதம் ஒன்று அவனுக்குக் கிடைக்கிறது. நாகரிகம் கருதி அதை உரியவரிடமே ஒப்படைக்க அதைப் பிரிக்காமலே பத்திரப்படுத்தி வைக்கிறான் அவன். எத்தனையோ முயற்சிக்குப் பின் அதை உரியவரிடம் சேர்ப்பிக்கவே முடிவதில்லை.

பல்வேறு பணிகளினூடே அதைக் கவனியாது ஓரிடத்தில் வைத்துவிட்டு அதைப் பொருட்படுத்தாமலே இருக்கிறான். நீண்ட நாட்களுக்குப் பின் அக்கடிதம் தட்டுப்படவே அதைப் பிரித்துப் படிக்கிறான். அந்தக் கடிதம் ஒரு மயக்கமூட்டுகிற காதல் கடிதமாக இருக்கிறது. டிட்டி என்ற தன் காதலிக்கு ஒருவன் எழுதிய கடிதத்தில் உள்ள காதல் அனுபவங்களை அப்படியே நமக்குக் கதையாகத் தந்திருக்கிறார். ஒரு கன்னட ஆண் தனது தெலுங்கு காதலிக்கு எழுதிய காதல் கடிதம்.

சுவாரஸ்யமான அந்தக் காதல் கடிதத்தை நம்முள் வசீகரமாகப் பரவவிடுகிறார். குதூகலமான அனுபவங்களைத் தருகிறது இவர்களது காதல் அனுபவம். அவர்கள் பிரிட்டிஷ் காலத்து வசீகரமான ஓட்டல் ஒன்றுக்கு சென்று உணவருந்துகிறார்கள். அங்கு அந்த உணவுகளைப் பெறுகிற விதமும், அவர்கள் காதல் ததும்ப அதைப் புசிக்கிற விதமும் கவித்துவம் நிரம்பியதாக இருக்கும். அந்த உணவு அவள் வாயில் கரைவதை ” கரையும் போது இவர் முகங்களைப் பார்க்க வேண்டும். அப்போதுதான் முத்தமிட்டு ஈரமான உதடுகளுடன் கண்மூடிக்கிடக்கும் அழகு தெரியும்”. என்பார்.

வாசத்திற்கு அன்றைய பொழுதுக்கும் ஒரு உள்ளார்ந்த தொடர்பு இருக்கிறது. அவன் ஒரு அத்தர் பாட்டிலை வாங்கிய கையோடு தான் அந்தக் காதல் கடிதம் அவனுக்குக் கிடைக்கிறது. இது ஒரு மெல்லிய குறியீட்டு இழையோடல். இந்த நிகழ்வு அவனது வாசங்களின் மீதான நம்பிக்கைக்கு வலுவூட்டுகிறதுதனிமை மட்டுமே உள் நோக்கிய பயணத்தை நிகழ்த்துகிறது. தன் உடலை மனதை ஒருமைக்குள் தள்ளிவிடுகிறது. கொரோனா காலம் வீட்டிலிருந்தே அமெரிக்க நிறுவனத்தின் கீழ் செய்கிற பணி. தனிமையான மனம் ஒரு வெற்றிடத்தில் உழல்கிறது. குழுவாக வாழ்ந்த ஆதிவாசியும், ஏகாந்தத்திற்கு ஏங்கும் சித்தனும் நமக்குள்தானே இருக்கிறான். இந்த இரட்டை மனதின் போதாமையோடுதானே நகர்கிறது வாழ்வு.

கொரோனா ஊரடங்கில் மனைவி தன் அம்மா வீட்டிற்குள் தங்கிவிடுகிறாள். அவன் மட்டுமே வீட்டிற்குள் தனித்திருக்க

நேர்ந்துவிடுகிறது. ஆளற்ற வெறுமையில் சூன்யம் கவிகிறது. "தொலைக்காட்சியை முடுக்கிறான். நெடுஞ்சாலையை முழுமையாக மறைத்த ஆயிரக் கணக்கான கால்கள். இந்தியாவே நடப்பது போல் இருந்தது" காலம் ஆகப்பெரிய மாற்றத்தை நோக்கிப் புரண்டு கொண்டிருந்தது. அச்சம் கூடாத மனிதர்கள் இருத்தல் அரிதுதானே. அந்தத் தனிமையுணர்வு தன்னை விபரீதமாக ஆராய முயல்கிறது.

கண்ணாடியின் முன்பாக நிர்வாணமாக நிற்கிறான். ஆடை களைவதற்கு முன்பு இருந்த கூச்சமும் , வெட்கமும் மெல்ல மெல்ல விலகித் தன்னழகையே நேசிக்கத் தொடங்குகிறான். நிர்வாணம் எப்போது மகாநிர்வாணம் ஆகிறது. மனம் தன் புழங்குதலை களைத்தெறிகிற போது .

ஓஷோ கூறியது போல மனமும் இறந்துவிடுகிற போது , உடலும் மனமும் என இரட்டை நிர்வாணத்தில் , நிர்வாணம் அறியா நிர்வாணமே மகா நிர்வாணம் . அவனின் மனைவி அருகாமையில் இருப்பதைக் காட்டிலும் இப்போதுதான் நினைவுக்கு வந்துகொண்டேயிருக்கிறாள். தான் காதலித்த பெண்ணின் கல்யாணத்துக்குச் சென்று அன்பளிப்பு வழங்கிவிட்டு வந்ததை அவனை ஏமாளியாக நினைத்து அவள் பொருமிக் கொண்டதெல்லாம் நினைவுக்கு வருகிறது.

இப்படியாகத் தனிமை ஆழ்மன ஆற்றாமைகளை, சுயத்தை, ஏமாற்றங்களை, அதனூடான அறச்சமாதானங்களை அசைபோடுகிற காலமாக அமைந்து விடுவதை பேசுகிற கதையாகத்தான் "வீட்டின் தனிமையில்" என்ற சிறுகதை அமைந்துள்ளது. நம் தனிமைக்குள்ளும் நுழைந்து பேசுகிறது இக்கதை

ஆறு சிறுகதைகள் அடங்கிய அத்தர் என்ற இச்சிறுகதைத் தொகுப்பு மூன்று மொழிகளில் வெளியாகியுள்ளது. காதலின் குறுக்கு வெட்டுத் தோற்றத்தை, காமத்தின் புதிய நகர்வை, தீராத நினைவாற்றாமையை வாசகர்களிடையே அழகியலோடும், பொறுப்போடும் எளிய கடத்தலை நிகழ்த்துகிறது. வசீகரமும், சொல்முறைகளில் சுவாரஸ்யமும் கூடிய தமிழின் முக்கிய சிறுகதைத் தொகுப்பாக இதை அணுக முடிகிறது.

தமிழிலிருந்து கன்னடத்திற்கும், கன்னடத்திலிருந்து தமிழுக்கும் ஏராளமான படைப்புகளை மொழிபெயர்த்துத் தந்திருக்கும் முக்கிய ஆளுமையான எழுத்தாளர். கே. நல்லதம்பி அவர்களின் முதல் சிறுகதைத் தொகுப்பு இது. இது எதிர் வெளியீடாக வந்துள்ளது.



**– சம்பத்.ஜி**

**(sampathnregs@gmail.com)**

# மேகம் கறுக்குது



# மழை வரப்பாக்குது


நீலவானமும் கார்மேகமும்
மோகம் மேலோங்கிட
தாகத்துடன் முட்டிக்கொண்டு
தடம் மாறியதில்
வானவீதியின் வாசலெங்கிலும்
இடியோசை முழக்கங்கள்
வெகுண்டெழுந்த
மின்னல் ஒளிக் கதிர்கள்
மேகக் கூடாரத்திற்குள்
மெல்ல ஊடுருவ
இயற்கைத் தாயின்
ஈரமான ஆசீர்வதிப்போடும்
குடைகளின் குத்தாட்டங்களோடும்
வண்ணமயமாய் நடந்தேருகிறது
மழை என்றதொரு
மகிழ்ச்சித் திருவிழா

**கவிரசிகன் அப்துல் நாசர்**
**மலேசியா**

# வண்ணமலரே

## அருகே வா

கூடையில் பூப்பறித்து
கொண்டையிலே சூடிநின்று
வண்ண மலரே அருகே வா
என்ற ஒற்றைச் சொல்லுக்காய் ஏங்கி
புத்தம் புதுமலராய்
நித்தம் காத்திருக்கேன்
காதல் உணர்வை
பெட்டகத்தில் பூட்டிவிட்டாய்
சருகான மலர்போல
வாசமின்றி போகிறேனே
மீன்விழி என்றீர்
வான்மழை
கண்ணில்
அன்பாய் இருந்தென்ன
ஆசையாய்அழைத்தாலென்ன
நீ அருகிருக்கும் சுகம் போலாகுமா
இந்தசீதையை சிறைமீட்க எப்போ வருவாயோ



**சாரதா பரா**
**கனடா**

# கடலும் அலையும்



கடலின் மடியில் தவழும் அலைகள்
காண்பவர் மனதைக் கவர்ந்தே இழுக்கும்
உடலும் உயிருமாய் ஒன்றாய் இணையும்
உயர்ந்து எழுந்தால் சுனாமியாய் தோன்றும்
உப்புக் கடலிலும் உயிர்கள் உள்ளது
உயர்ந்த வளத்தை இயல்பாய் கொண்டது
குப்பை கொட்டி கொடுமை செய்யாமல்
குவலயம் தன்னில் கடலையும் பேணுவோம்
அலையுடன் கடலும் ஆனந்தம் காணட்டும்

**விமலாதேவி சிவநேசன்**
நெதர்லாந்து



# மனிதம் தேடி

மனதைச் சிதைக்கும் மாயை உலகம்
மரபை மீறி மகுடம் கொள்ள
மனிதம் தொலைந்து மாண்பைத் தேடும்
புனிதம் காக்க மறந்து போகும்
புதிய சரிதம் எழுதும் நாளை
புரிதல் தொலைந்து மனிதம் அலையும்
அவனி வாழ்வும் அசிங்கம் சுமக்கும்

**பொன்.தமிழரசன்**

# திருமண நாள்



(உலக முத்தமிழ்க் கூட்டமைப்பின் நிறுவனத்தலைவரும்,
கடையேழு வள்ளல்களுக்குப் பின் தோன்றிய தற்காலக்
கொடைவள்ளலும், தொடர்ந்து தமிழின் வளர்ச்சிக்காக
அயராத உழைத்துக் கொண்டிருக்கும் தமிழ்மாமணி
தாழை இரா. உதயநேசன் அய்யாவிற்கும், அன்பால்
கருணையால் உயர்ந்த தாய் வரிசையில் முதல் தாய்
அம்மா கலையரசி அவர்களுக்கும்
27.05.2023 அன்று திருமண நாள்.
வானத்து நட்சத்திரங்கள் ஒவ்வொன்றும், ஒவ்வொரு
வரத்தையும், வாழ் நாளையும் அவர்கள் இருவருக்கும்
நீட்டித்துத் தரட்டும் என
முத்தமிழ்நேசன் வாழ்த்தி வணங்குகிறது .)



# உலகத் தமிழர்களே!

கலை – இலக்கியம் – சமூகவியல் – நாட்டுப்புறவியல்
உள்ளிட்ட
இணைய வழிப் படிப்புகளில்
இணைய வாருங்கள்!

உலக அரங்கில்
தனியாய் ஒரு
உன்னத உலகம்!

தமிழே நமது உயிர் மொழி!– அது
தமிழரின் உயர்வுக்கு ஒரே வழி!

## அமெரிக்க முத்தமிழ்ப் பல்கலைக்கழகம்

விபரங்களுக்கு:

www.americamutamiluniversity.org